தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 145 | 4 Pages | 23.12.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 145 | 4 பக்கங்கள் | 23.12.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று**

**விளக்கம்:**
**இணையில்லாத ஓர் அறமாகக் கொல்லாமை நல்லது, அதற்கு அடுத்த நிலையில் கூறத்தக்கதாகப் பொய்யாமை நல்லது.**

## குடியரசு தின அணிவகுப்பு: தமிழக ஊர்திக்கு அனுமதி இல்லை




புதுடெல்லி, டிச.23

குடியரசுதினவிழாவைமுன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் தலைநகர் டெல்லியில் மாநில அரசுகளின் சார்பில் அனுப்பப்படும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெறும். இதன்படி, 2025 குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்குபெற 15 மாநிலங்களின் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அணிவகுப்புநிகழ்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இடம்பெறவில்லை. தமிழக அலங்கார ஊர்திக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், ஆந்திர பிரதேசம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களின் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் டெல்லியின் அலங்கார ஊர்திக்கும் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க அனுமதி அளிக்கப்படவில்லை. இது பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியல் என டெல்லி முன்னாள் முதல்மந்திரி கெஜ்ரிவால் விமர்சித்துள்ளார். டெல்லியின் அலங்கார ஊர்திக்கு தொடர்ந்து 4வது ஆண்டாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மும்பையில் கார் மோதி 4 வயது சிறுவன் பலி இளைஞர் கைது


மும்பை, டிச.23

மராட்டிய மாநிலம் மும்பையில் வடாலா பகுதியில் உள்ள அம்பேத்கர் கல்லூரி அருகே, சாலையில் வேகமாக சென்ற சொகுசு கார் ஒன்று சாலையோரம் நின்று கொண்டிருந்த 4 வயது சிறுவன் ஆயுஷ் லக்ஷ்மன் மீது மோதியது. இந்த விபத்தில் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான்.

காரை ஓட்டி வந்த 19 வயதான சந்தீப் கோலே என்ற இளைஞரை போலீசார் கைது செய்துள்ளனர். உயிரிழந்த சிறுவனின் தந்தை கூலி தொழிலாளி என்பதும், அவர்கள் சாலையோரம் வசித்து வந்ததும் தெரியவந்துள்ளது. விபத்தை ஏற்படுத்திய காரை பறிமுதல் செய்த போலீசார், தொடர்ந்து இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக கடந்த 9ந்தேதி மராட்டிய மாநிலத்தில் உள்ள குர்லா பகுதியில் மாநகராட்சி பேருந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்ற வாகனங்கள் மீது மோதியது. இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்த நிலையில், 42 பேர் படுகாயமடைந்தனர். சமீபத்தில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை வெளியிட்ட தகவலின்படி, கடந்த 5 ஆண்டுகளில் அதிக விபத்துகள் ஏற்பட்ட மாநிலமாக மராட்டிய மாநிலம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்து குறிப்பிடத்தக்கது.

## திருப்பதியில் மார்ச் மாதத்துக்கான தரிசன டிக்கெட், தங்குமிட ஒதுக்கீடு தேதிகள் மாற்றம்



திருமலை, டிச.23

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வரும் ஜனவரி மாதம் 10ந் தேதி முதல் 19ந் தேதி வரை வைகுண்ட ஏகாதசி துவார தரிசனம் நடைபெற உள்ளது. இந்த 10 நாட்களும் பக்தர்கள் துவார தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இதற்கான ஸ்ரீவாணி தரிசன டிக்கெட் மற்றும் சிறப்பு தரிசன டிக்கெட்டுகள் ஆன்லைனில் வெளியிடப்பட உள்ளதால், வழக்கமான மாதாந்திர தரிசனத்திற்கான ஸ்ரீவாணி டிக்கெட் மற்றும் சிறப்பு தரிசன டிக்கெட் ஒதுக்கீட்டு தேதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அடுத்த மாதம் (ஜனவரி) 10 முதல் 19ந்தேதி வரை 10 நாட்கள் வைகுண்ட துவார தரிசனத்துக்காக ஸ்ரீவாணி தரிசன டிக்கெட்டுகள் 23ம் தேதி (நாளை) காலை 11 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

மேலும் 10 நாட்கள் வைகுண்ட துவார தரிசனத்துக்கான ரூ.300 சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகள் 24ம் தேதி காலை 11 மணிக்கு வெளியிடப்படும்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கான ஸ்ரீவாணி தரிசனம், ரூ.300 சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகளின் ஒதுக்கீடு தேதிகள் மாற்றப்பட்டுள்ளன. ஸ்ரீவாணி தரிசன டிக்கெட்டுகள் 25ம் தேதி காலை 11 மணிக்கு வெளியிடப்படும். மார்ச் மாதத்துக்கான ரூ.300 சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகள் 26ம் தேதி காலை 11 மணிக்கு வெளியிடப்படும். திருப்பதி மற்றும் திருமலையில் உள்ள தங்கும் விடுதிகளில் உள்ள அறைகள் ஒதுக்கீடு அன்றைய தினம் மாலை 3 மணிக்கு வெளியிடப்படும்.

இந்த மாற்றத்தைக் கவனத்தில் கொண்டு, பக்தர்கள் தங்களுக்கான தரிசன டிக்கெட்டுகள் மற்றும் அறைகளை தேவஸ்தானத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://ttdevasthanams.ap.gov.in ல் மட்டுமே முன்பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் நாகூர் ஹனிபா குடும்பத்தினர் சந்திப்பு

சென்னை, டிச.23

நாகூர் ஹனிபா நூற்றாண்டு தொடக்கத்தை முன்னிட்டு நாகப்பட்டினம் நகரில் அமைந்துள்ள தைக்கால் தெரு மற்றும் புதிதாக அமைய உள்ள பூங்காவுக்கு 'இசை முரசு' ஹனிபா பெயர் சூட்டி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. இதற்கு நாகை எம்.எல்.ஏ. ஆளூர் ஷாநவாஸ் நன்றி தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், நாகூர் ஹனிபா குடும்பத்தினர் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.



இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எக்ஸ் தள பக்கத்தில்,

இசை முரசு நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு 'இசை முரசு நாகூர் E.M.ஹனிபா தெரு' என்றும், சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு 'இசை முரசு நாகூர் E.M.ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா' என்றும் பெயர் சூட்டி சிறப்பு செய்தார்கள்.

இதனைமுன்னிட்டுமுதலமைச்சர் அவர்களை, அய்யா நாகூர் ஹனிபா அவர்களின் குடும்பத்தினருடன் தலைமைச் செயலகத்தில் சந்தித்து நன்றிகள் தெரிவித்துக்கொண்டோம் என பதிவிட்டுள்ளார்.

# கோவில் உண்டியலில் விழுந்த ஐபோன் திரும்ப வழங்கப்படுமா..? அமைச்சர் சேகர் பாபு பதில்

திருப்போரூர், டிச.23

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் பகுதியில் கந்தசுவாமி கோவில் உள்ளது. நகரின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் இந்த கோவில் அறுபடை வீடுகளுக்கு ஒப்பானதாக கருதப்படுகிறது.

இந்த கோவிலுக்கு தமிழகம் மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகின்றனர். சாதாரண நாட்களில் நூற்றுக்கணக்கானபக்தர்கள்வருகை தரும் நிலையில், திருவிழா காலங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகப்பெருமானை தரிசனம் செய்வார்கள். தங்கள் வேண்டுதலை நிறைவேற்றிய முருகப் பெருமானுக்கு பல்வேறு காணிக்கைகளை பக்தர்கள் செலுத்துவது வழக்கம்.

இந்நிலையில் இந்த கோவிலுக்கு அம்பத்துாரைச் சேர்ந்த தினேஷ் என்பவர் கடந்த ஆகஸ்ட் மாதம் சாமி தரிசனம் செய்ய வந்துள்ளார். குடும்ப பிரச்னை காரணமாக மன அழுத்தத்தில் இருந்த அவர், கோவில் உண்டியலில் காணிக்கை செலுத்தும்போது, தன்னுடைய 'ஐபோன் 13புரோ' ரக மொபைல் போனையும் தவறி போட்டுள்ளார். அதன் பின்கோவில்நிர்வாகத்திடம் நடந்ததைக் கூறி, மொபைல் போனை திரும்பக் கேட்டுள்ளார். அதற்கு கோவில் நிர்வாகத்தினர் உண்டியல் காணிக்கை எண்ணும்போது தகவல் அளிப்பதாக கூறி அனுப்பி வைத்துள்ளனர்.





இந்நிலையில், நேற்று முன்தினம் அதிகாரிகள் முன்னிலையில் கோவில் உண்டியல் திறந்து எண்ணப்பட்டது. அப்போது உண்டியலில் இருந்து ஐபோன் எடுக்கப்பட்டது. இதனையடுத்து தினேசுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவரும் வந்திருந்தார். அப்போது அவர் தனது மொபைல் போனை தருமாறு கேட்டுள்ளார். அதற்கு கோவில் நிர்வாகத்தினர், 'உண்டியலில் போட்டவை முருகனுக்கு சொந்தமாவது. மொபைல் போனை தர முடியாது', வேண்டுமென்றால், மொபைல் போனில் உள்ள தரவுகளை மட்டும் எடுத்து கொள்ளலாம் என்று கூறியதாக தெரிகிறது.

அதற்கு தினேஷ், தன்னிடம் தரவுகளை பெற லேப்டாப் உள்ளிட்டவை இல்லை. ஓரிரு நாளில் ஏற்பாட்டுடன் வந்து தரவுகளை பதிவிறக்கம் செய்து கொள்வதாக தெரிவித்தார். பின்னர் அந்த ஐபோன் கோவில் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது.

இந்நிலையில் கோவில் உண்டியலில் விழுந்த ஐபோன் திரும்ப வழங்கப்படுமா என்று அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபுவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர், "அறநிலையத்துறை விதிகளை ஆராய்ந்து, சாத்தியக்கூறு இருந்தால் செல்போனை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் பதிலளித்தார்.

# சென்னை கலங்கரை விளக்கத்தில் பராமரிப்பு பணி: ரேடார் ஆண்டனா மாற்றம்

சென்னை, டிச.23

தமிழகத்தில் மொத்தம் 25 கலங்கரை விளக்கங்கள் உள்ளன. இதில் சென்னை மெரினா கடற்கரையில் இருக்கும் கலங்கரை விளக்கம் 10 தளங்களுடன் சுமார் 45 அடி உயரம் கொண்டது. இந்த கலங்கரை விளக்கம் கடந்த 1977ம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது.

இந்த கலங்கரை விளக்கத்தின் 9வது தளம் வரை பொதுமக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. 10வது தளத்தில் உயர் பாதுகாப்புரேடார்ஆண்டனாஉள்ளதால், அங்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த ரேடார் ஆண்டனா மூலம் சுமார் 100 கி.மீ. வரை கடலில் செல்லும் கப்பல்களை கண்காணிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த ரேடார் ஆண்டனா கடந்த ஒரு மாதமாக பழுதாகி இருந்ததால், அதனை மாற்ற வேண்டும் என பெங்களூருவைச் சேர்ந்த பொதுத்துறை நிறுவனமான பெல் நிறுவனத்திற்கு கடலோர காவல் படையினர் தகவல் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் பெல் நிறுவன ஊழியர்கள் இன்று சென்னை கலங்கரை விளக்கத்தில் உள்ள ரேடார் ஆண்டனாவை மாற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த 3 நாட்களுக்கு சென்னை கலங்கரை விளக்கத்தில் பராமரிப்பு பணி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.கலங்கரைவிளக்கத்தில் உள்ள ரேடார் ஆண்டனா சுமார் சுமார் 1,500 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் சுமார் 10 முதல் 12 ஆண்டுகள் வரை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.





# தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கை நிலைநாட்ட உறுதியான நடவடிக்கை தேவை: ஓ.பன்னீர் செல்வம்

சென்னை, டிச.23

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எந்த ஒரு நாட்டில் சட்டம்ஒழுங்கு நிலைநாட்டப்படுகிறதோ அந்த நாட்டில்தான் பொருளாதாரம் வளர்ச்சி அடையும், மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இருக்கும், தொழில் முனைவோர்கள் தொழில் துவங்க முன் வருவார்கள். ஆனால், தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கு சீரழிந்து கொண்டு இருக்கிறது. சட்டம்ஒழுங்கு சீரழிவில் இந்தியாவிலேயே முதன் முதன் மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லும்அளவுக்குநிலைமை மோசமாகிக்கொண்டே இருக்கிறது. அண்மையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் அரிவாளால் வெட்டப்பட்ட நிலையில், மக்கள் நடமாட்டம் மிகுந்த, காவல் துறையினர் பாதுகாப்பில் இருந்த நேரத்தில், திருநெல்வேலி நீதிமன்ற வளாகத்தின் முன்பு பட்டப்பகலில் ஒருவர் கொலை செய்யப்படுகிறார் என்றால், அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கு சீரழிந்து இருக்கிறது. கொலை வழக்கில் கைதாகி குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டவர், ஓராண்டிற்கு பின் வெளியில் வருகிறார். வேறு வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு வருகிறார் என்றால், அவர்மீது தாக்குதல் நடத்தப்படும் என்பது காவல் துறை அறிந்த விஷயம். இந்தச் சூழலில், காவல் துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தக் கொலையை தடுத்திருக்கலாம். ஆனால், இதைச் செய்ய தி.மு.க. அரசு தவறிவிட்டது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டுசட்டம் படிக்கும் மாணவர் திருநெல்வேலி மாவட்டம், கமிட்டி நடுநிலைப் பள்ளி அருகே கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். இதுபோன்ற சம்பவங்களுக்கு எல்லாம் மூல காரணமாக விளங்குவது மதுவும். போதைப் பொருட்களும்தான். தி.மு.க. அரசு சட்டம்ஒழுங்கை சீரழித்து வருவதை தெரிந்துதான் சென்னை உயர் நீதிமன்றம் தாமாகவே முன்வந்து மேற்படி வழக்கு விசாரணையை எடுத்துக் கொண்டு சாமாரியான கேள்விகளை எழுப்பி உள்ளது. மேற்படி கொலை சம்பவம் தொடர்பாகவும், நீதிமன்றங்களில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டதோடு மட்டுமல்லாமல், திருநெல்வேலி வழக்கறிஞர்களிடமும் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது. மொத்தத்தில், சட்டம்ஒழுங்கை நிலைநாட்டுவதில் தி.மு.க. அரசு படுதோல்வி அடைந்துவிட்டது. மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. காவல் துறையினரை கண்டு குற்றவாளிகள் அஞ்சும் நிலை இல்லை. ஜம்மு காஷ்மீரை விட மோசமான நிலைமை தமிழ்நாட்டில் நிலவுகிறது.

சட்டம் ஒழுங்கு தொடர்பாக, நான் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பல அறிக்கைகள் வெளியிட்டும், நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவில்லை. மாறாக, நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறது. தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கை நிலைதாட்ட உறுதியான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை.. மதுரை மத்திய சிறை உதவி ஜெயிலருக்கு தர்மஅடி

மதுரை, டிச.23

மதுரை மத்திய சிறையில் உதவி ஜெயிலராக குருசாமி பணிபுரிந்து வந்துள்ளார். அங்கு விசாரணை கைதியுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த பழக்கத்தின் மூலம் அவரது மகள் மற்றும் பேத்தியுடன் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் அந்த சிறைவாசியின்பேத்தியை தான்வசிக்கும் இடத்திற்கு தனியாக அழைத்ததாக கூறப்படுகிறது. இதனை தனது குடும்பத்தாரிடம் மாணவி கூறியுள்ளார். உடனே மாணவியை அனுப்பி வைத்துவிட்டு குடும்பத்தார் மறைவாக நின்று நோட்டமிட்டுள்ளனர்.



அப்போது அந்த இடத்திற்கு வந்த உதவி ஜெயிலர், மாணவியிடம் ரூ. 500 கொடுத்து மோட்டார் சைக்கிளில் வருமாறு கூறியுள்ளார். உடனே அந்த மாணவி கூச்சலிட்டுள்ளார். மாணவி கூச்சலிட்டத்தை அடுத்து அருகிலிருந்த மாணவியின் சித்தி உதவி ஜெயிலருக்கு தர்ம அடி கொடுத்தார்.

இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சம்பவம் இடத்திற்கு வந்த போலீசார் குருசாமி மற்றும் மாணவியின் குடும்பத்தாரை மகளிர் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உதவி ஜெயிலர் அடிவாங்கிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# பனியன் ஆடைகளை அனுப்பும் திருப்பூர் கொரியர் நிறுவனத்தில் தீ விபத்து

திருப்பூர், டிச.23

திருப்பூர் மணிய காரம் பாளையம் பகுதியில் பின்னலாடைகளை பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பும் கொரியர் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. முதலிபாளையம் சிட்கோ பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பின்னலாடைகள் கொரியர் நிறுவனத்திற்கு கொண்டு வரப்பட்டு ஆன்லைன் ஆர்டர்களுக்கு ஏற்றவாறு அந்தந்த பகுதி வாரியாக அனுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்று காலை கொரியர் நிறுவன கட்டிடத்தின் ஒரு பகுதியில் திடீரென கரும்புகை வெளியேறியது. பின்னர் சிறிது நேரத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறினர். இதையடுத்து தீ மளமளவென கொளுந்து விட்டு எரிந்தது. ஊழியர்கள் தீயை அணைக்க முயற்சி செய்தும் முடியவில்லை. உடனே இது குறித்து திருப்பூர் தெற்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.



தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் முடியவில்லை. இதையடுத்து திருப்பூர் வடக்கு மற்றும் ஊத்துக்குளியில் இருந்து மேலும் 4 தீயணைப்பு வண்டிகள் மற்றும் 5 டேங்கர் லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தின் காரணமாக கொரியர் நிறுவன கட்டிடம் முழுவதும் சேதமடைந்தது மட்டுமல்லாது கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளில் விரிசல் அடைந்து இடிந்து விழும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதியில் பொதுமக்கள் செல்ல அனுமதிக்காமல் தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கட்டிடத்தின் பின்புறத்தில் பின்னலாடை உற்பத்திக்கு தேவையான நிட்டிங், டைலரிங் உள்ளிட்ட நிறுவனங்கள் செயல்பட்டு வரக்கூடிய நிலையில் அவற்றுக்கு தீ பரவாமல்இருக்கும்வகையில் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

இந்த தீ விபத்தில் கொரியர் நிறுவனத்தில் இருந்த பல கோடி மதிப்பிலான ஆடைகள் எரிந்து சேதமாகின. இதனைப்பார்த்து ஊழியர்கள் கண்ணீர் சிந்தினர். தீ விபத்தால் அப்பகுதியில் 50 அடி உயரத்திற்கு கரும்புகை வெளியேறியது. இதனால் அப்பகுதி முழுவதும் மேகமூட்டம் போல் காணப்பட்டது.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்று நல்லூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குழந்தையை கொன்று தாய் தற்கொலை முயற்சி கீழ்பாக்கத்தில் சோகம்

சென்னை, டிச.23

சென்னை கீழ்பாக்கம் பகுதியில் திவ்யா ராம்குமார் தம்பதி வசித்து வந்தனர். இந்த தம்பதிக்கு 5 வயதில் ஒரு மகனும் ஒன்றரை வயதில் ஒரு மகனும் உள்ளனர். திவ்யா ராம்குமார் தம்பதி கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர். திவ்யா தனது தாய் வீடான கீழ்பாக்கத்திலும் ராம்குமார் பெருங்களத்தூரிலும் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் திவ்யா, தனது இரு குழந்தைகளின் கழுத்தையும் அறுத்து விட்டு தானும் கத்தியால் தன்னை தானே குத்தியுள்ளார்.இதில் ஒன்றரை வயது குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காயத்துடன் இருந்த 5 வயது சிறுவனுக்கும் தாய் திவ்யாவுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திவ்யா கணவனை பிரிந்து வாழ்வதாகவும், மன அழுத்தத்தால் வெறிச்செயலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனது குழந்தையை கொன்று விட்டு தானும் தற்கொலை முயற்சி செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கல்குவாரி முறைகேடு குறித்து புகார் அளித்த சமூக ஆர்வலர் மீது கொலைவெறி தாக்குதல்

வாடிப்பட்டி, டிச.23

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே கச்சைகட்டி பெருமாள் நகரை சேர்ந்தவர் முனுசாமி மகன் ஞானசேகரன் (வயது 32) சமூக ஆர்வலர். இவர் அந்த பகுதியில் உள்ள கல்குவாரிகளின் முறைகேடுகள் பற்றி கலெக்டர் மற்றும் ஊடகங்களில் புகார் தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் சம்பவத்தன்று தனது வீட்டின் முன்பாக ஞானசேகரன் செல்போனில் பேசிக்கொண்டிருந்தார்.



அப்போது ராமையன்பட்டி அமோதித் என்பவரின் கல்குவாரியில் வேலை பார்க்கும் முருகன் என்பவர் இரும்பு கம்பியால் ஞானசேகரனை சரமாரியாக தாக்கியதுடன், ஆபாசமான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தார்.

ஞானசேகரனின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வரவே, முருகன் தப்பி ஓடி விட்டார். தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த ஞானசேகரன் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது குறித்து வாடிப்பட்டி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கணேஷ்குமார் வழக்குப் பதிவு செய்து முருகனை வலைவீசி தேடி வருகிறார்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார் எழுத்தாளர் வேங்கடாசலபதி

சென்னை, டிச.23

வரலாற்று ஆய்வாளரும் எழுத்தாளருமான ஆ.இரா.வேங்கடாசலபதிக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய "திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908" ஆய்வு நூலுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டது. இதையடுத்து சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்ட ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று முகாம் அலுவலகத்தில் எழுத்தாளர் வேங்கடாசலபதி சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ஆ.இரா.வேங்கடாசலபதி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தற்போது சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (MIDS) பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

# கடையம் அருகே தலை துண்டித்து விவசாயி கொலை

ஆழ்வார்குறிச்சி, டிச.22

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள ஆழ்வார்குறிச்சி கருத்தப்புலியூர் அந்தோணியார் கோவில் தெருவை சேர்ந்தவர் அருள். இவருக்கு 2 மனைவிகள். இதில் மூத்த மனைவிக்கு இருதயராஜ் (வயது47) என்ற மகன் உள்ளார்.

விவசாயியான இவருக்கும், அவரது தந்தையின் 2வது மனைவியின் மகன்களான ஆரோக்கியராஜ், ஜெயபால் ஆகியோருக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இருதயராஜ் அப்பகுதியில் உள்ள அச்சங்குளத்தில் மீன்பிடிக்கும் குத்தகை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்றிரவு அவர் குளப்பகுதிக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த ஆரோக்கியராஜ், ஜெயபால் ஆகிய 2 பேரும் இருதயராஜுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். திடீரென தாங்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் இருதயராஜை வெட்டியதோடு அவரது தலையை துண்டித்துகொடூரமாககொலை செய்தனர். பின்னர் 2 பேரும் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.



இந்த கொலை குறித்து தகவல் அறிந்ததும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சீனிவாசன், டி.எஸ்.பி. ஜெயபால் பர்னபாஸ், இன்ஸ்பெக்டர் மேரி ஜெமிதா, சப்இன்ஸ்பெக்டர் விஜயகுமார் மற்றும் போலீசார்அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் கொலை செய்யப்பட்ட இருதயராஜின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கொலை தொடர்பாக டி.எஸ்.பி. ஜெயபால் பர்ணபாஸ் கூறுகையில், சொத்து பிரச்சனை காரணமாக ஆரோக்கியராஜ், ஜெயபால் ஆகிய 2 பேரும் இருதயராஜை கொலை செய்திருப்பது தெரியவந்துள்ளது. 2 பேரின் செல்போன்களும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. அவர்களை பிடிக்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது என்றார்.

சொத்து பிரச்சனையில் விவசாயி தலை துண்டித்து கொலை செய்யப்பட்ட சம்பவம்அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மத்தூர் அருகே காரில் கடத்திய 400 கிலோ குட்கா சிக்கியது: டிரைவர் தப்பியோட்டம்

மத்தூர்: டிச.23

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் போலீசார் கிருஷ்ணகிரிஊத்தங்கரை சாலை பெருகோபனப்பள்ளி பக்கமாக ரோந்து சென்றனர்.

அந்த பகுதியில் இருந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது அதில் 400 கிலோ புகையிலை பொருட்கள் இருந்தது தெரிய வந்தது.

விசாரணையில் பெங்களூருவில் இருந்து திருவண்ணாமலைக்கு குட்கா காரில் கடத்தி வரப்பட்டதும், போலீசுக்கு பயந்து காரை விட்டு டிரைவர் தப்பி சென்றதும் தெரிய வந்தது.



இதைத் தொடர்ந்து போலீசார் குட்கா மற்றும் காரை பறிமுதல் செய்தனர். மேலும் தப்பி ஓடிய டிரைவரை தேடி வருகிறார்கள்.

ஒசூர் தாலுகா மத்திகிரி போலீசார் டி.வி.எஸ். சோதனை சாவடி பக்கமாக ரோந்து சென்றனர். அந்தவழியாகஸ்கூட்டரில் வந்த நபரை நிறுத்தி சோதனை செய்தனர். இதில் 13 கிலோ 750 கிராம் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருந்தது தெரிய வந்தது.

விசாரணையில் மணிகண்டன் (33), ஒசூர் முனீஸ்வர் நகரை சேர்ந்தவர் என தெரிய வந்தது. அவரை போலீசார் கைது செய்தனர். ரூ.19 ஆயிரத்து 600 மதிப்புள்ள ஸ்கூட்டர், புகையிலை பொருட்கள்பறிமுதல்செய்யப்பட்டன.

# தாவரகரை வனப்பகுதியில் 20 யானைகள் முகாம்

தளி, டிச.23

கிருஷ்ணகிரி மாவட்டம்சானமாவு வனப்பகுதியில் முகாமிட்டு சுற்றித்திரிந்த 40க்கும் மேற்பட்ட காட்டு யானைகளை வனத்துறையினர் தேன்கனிக்கோட்டை கஸ்பா வனப்பகுதிக்கு விரட்டினர். இந்த காட்டு யானைகளும் ஏற்கனவே அங்கு முகாமிட்டிருந்த காட்டு யானைகள் என மொத்தமாக 50க்கும் மேற்பட்ட யானைகள் சேர்ந்தன.

இந்த நிலையில் நேற்று இரவு தேன்கனிக் கோட்டை கஸ்பா பகுதியில் முகாமிட்டிருந்த 50க்கும் மேற்பட்ட காட்டு யானைகளை வனத்துறையினர்தாவரக்கரைவனப்பகுதிக்கு விரட்டும் பணிகளில் ஈடுபட்டனர். அப்போது காட்டு யானைகள் குட்டிகளுடன் தேன்கனிக்கோட்டை அஞ்செட்டி சாலையை கடந்து சென்றன.

இந்த காட்டு யானைகள் கவிக்கோவில், மாரசந்திரம் மேடு, சாப்ராணப்பள்ளி, சீனிவாசபுரம், லக்கசந்திரம் வழியாக அஞ்செட்டி சாலையை கடந்து சென்றன. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அந்த சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்து வனத்துறையினர் காட்டு யானைகளை



கொத்தூர், உச்சனப்பள்ளி, அர்த்தகூர், பாலதோட்டனப்பள்ளி, ரங்கசந்திரம், கோட்டை உளிமங்கலம் கிராமங்கள்வழியாக தாவரக்கரை வனப்பகுதிக்கு விரட்டி சென்றனர். காட்டு யானைகள் விரட்டப்பட்டதால் ஒசூர் சானமாவு, ராயக் கோட்டை, ஊடேதுர்கம், தேன்கனிக்கோட்டை கஸ்பா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் நிம்மதியடைந்தனர். இதனிடையே, 20 யானைகள் தாவரக்கரை வனப்பகுதியில் முகாமிட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் உள்ள விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர். மேலும் யானைகளை விரைந்து கர்நாடக வனப்பகுதிக்குள் விரட்ட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து காட்டு யானைகள் கூட்டத்தை வனத்துறையினர்கர்நாடக மாநில வனப்பகுதிக்கு விரட்ட திட்டமிட்டுள்ளனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: தி.மு.க.வுக்கு விட்டு கொடுக்க தமிழக காங்கிரஸ் முடிவு

சென்னை, டிச.23

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த தொகுதியில் காங்கிரஸ்சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மகன் திருமகன் ஈ.வே.ரா. போட்டியிட்டு வென்றார்.

ஆனால் அடுத்த 2 ஆண்டுகளில் திடீரென்று அவர் மரணம் அடைந்தார். இதனால் அந்த தொகுதி இடைத்தேர்தலை சந்தித்தது. அப்போது மீண்டும் காங்கிரசுக்கே அந்த தொகுதி ஒதுக்கப்பட்டது. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் களம் இறக்கப்பட்டார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் இளங்கோவன் வெற்றி பெற்று எம்.எல்.ஏ. ஆனார்.

மகனை போலவே தந்தை இளங்கோவனும் கடந்த 14ந்தேதி உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார்.

இதனால் அந்த தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஒரு தொகுதி காலியானால் 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது விதி. அதன்படி இந்த தொகுதிக்கான தேர்தல் ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தொடங்கி விட்டது.




வருகிற பிப்ரவரி மாதம் டெல்லி மாநில சட்டசபைக்கு தேர்தல் நடைபெற உள்ளது. அப்போது ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலும் நடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு 5 ஆண்டுகள் முடிவடைவதற்குள் 2வது முறையாகஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை சந்திக்கிறது.

மீண்டும் இந்த தொகுதியை காங்கிரசுக்கு கொடுப்பதை விட தி.மு.க.வே போட்டியிட விரும்புகிறது.

கடந்த தேர்தலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோளின் பேரில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போட்டியிட்டார். அப்போது தலைவர் என்ற ரீதியில் தி.மு.க. காங்கிரஸ் கட்சியினர் தீவிரமாக தேர்தல் பணியாற்றினார்கள்.

ஆனால் இந்த தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் தரப்பில் பலமான வேட்பாளர்கள் இல்லை. ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் குடும்பத்தில் இருந்து அவரது மகன் சஞ்சயை போட்டியிட வைக்க திட்டமிட்டார்கள். ஆனால் அவர் இடைத்தேர்தலில் போட்டியிட விருப்பமில்லை என்று கூறி விட்டார்.

அத்துடன் தனது முடிவையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தெரிவித்து விட்டார்.

இந்த சூழ்நிலையில் காங்கிரசில் இருந்து வேறு நபர்களை தேர்வு செய்வதிலும் பிரச்சனை உள்ளது. இடைத்தேர்தலை சந்திக்க செலவு அதிகமாகும். அதற்கு தகுதியானவர்கள் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே தி.மு.க.வுக்கு விட்டுக் கொடுத்து விடலாம் என்ற முடிவுக்கு காங்கிரஸ் வந்திருப்பதாக கூறப்படுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதியின் நிலவரத்தை தமிழக காங்கிரஸ் கமிட்டி சார்பில் டெல்லி மேலிடத்துக்கும் தெரிவித்து இருப்பதாக கூறப்படுகிறது.

இதையடுத்தே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்றைய தனது சுற்றுப் பயணத்தின்போதுஈரோடு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளை சந்தித்து விவாதித்தார்.

பின்னர் நிருபர்களிடம் கூறும்போது, ஈரோடு கிழக்கு தொகுதியில் யார் போட்டியிடுவது என்பது பற்றி முறையாக காங்கிரசாருடன்கலந்து பேசி முடிவெடுத்து அறிவிப்போம் என்றார்.

விட்டுக் கொடுக்கும் மன நிலைக்கு காங்கிரஸ் வந்திருப்பதால் ஈரோடு தொகுதியில் தி.மு.க.வே போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த தொகுதியில் பலத்தை நிருபிப்பதன் மூலம் கொங்கு மண்டலத்தில் 2026 தேர்தலுக்கான வலுவான அடித்தளத்தை உருவாக்க முடியும் என்று தி.மு.க. கருதுகிறது.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 3500 கனஅடியாக சரிவு

ஒகேனக்கல், டிச.23

தமிழகம் கர்நாடகா எல்லை பகுதியில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில தினங்களுக்கு முன்பு பெய்த கனமழையின் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி வரை அதிகரித்து சென்றது.

இந்த நிலையில் மழையின் அளவு குறைந்ததால் காவிரி ஆற்றில் நீர்வரத்து படிப்படியாக குறையத் தொடங்கியது. இதனால்



நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை சற்று சரிந்து வினாடிக்கு 3500 கன அடியாக குறைந்துள்ளது.

நீர்வரத்து குறைந்த போதிலும் மெயின் அருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

தமிழக கர்நாடகா எல்லை பகுதியில் அடிக்கடி மழை பெய்து வருவதால், பிலிக்குண்டுலுவில் தொடர்ந்து மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் நீர்வரத்தை கண்காணித்து வருகின்றனர்.

# கேமரா பதிவுகளை வெளியிட வேண்டியது தானே? ராகுல் மீதான புகார் தொடர்பாக ப.சிதம்பரம் கேள்வி

சென்னை, டிச.23

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் அம்பேத்கர் விவகாரம் தொடர்பாக பா.ஜ.க. எம்.பி.க்களும், இந்தியா கூட்டணி எம்.பி.க்களும் நேருக்கு நேர் போட்டி போராட்டம் நடத்தினார்கள்.

அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் கீழே விழுந்து 2 பா.ஜ.க. எம்.பி.க்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பா.ஜ.க. எம்.பி.க்கள் இருவரும் தங்களை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தள்ளிவிட்டதாக குற்றம் சாட்டினார்கள். இது தொடர்பாக பாராளுமன்ற சாலை காவல் நிலையத்தில் பா.ஜ.க. சார்பில் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் ராகுல் மீது 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளனர். ராகுல் மீது பொய் புகார் கூறப்பட்டுள்ளதாக இந்தியா கூட்டணியை சேர்ந்த கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் நிதி அமைச்சருமான ப. சிதம்பரம் எக்ஸ் தள பக்கத்தில், பாராளுமன்ற நுழைவாசலில் என்ன நடந்தது என்பது உலகத்திற்குத் தெரிய வேண்டாமா?

நுழைவாசலிலும் பாராளுமன்ற வளாகத்திலும் பொருத்தப்பட்டுள்ள கண்



காணிப்புக் கேமராக்களில் உள்ள ஒளி, ஒலி பதிவுகளை வெளியிட வேண்டியது தானே?

அந்தப் பதிவுகளை வெளியிடுவதற்கு அரசு ஏன் மறுக்கிறது?

உண்மை என்ன, பொய் என்ன என்பதைப் பதிவுகளை வெளியிட்டால் தெளிவாகத் தெரிந்துவிடுமே?என்றுகூறியுள்ளார்.

மேலும் மற்றொரு பதிவில்,

பாராளுமன்ற நுழைவாயிலில் பொருத்தப்பட்டுள்ள கேமராக்களின் ஒளி, ஒலி பதிவுகளை வெளியிட வேண்டும் என்பது கோரிக்கை...

இந்த எளிய கோரிக்கையைப் புரிந்த கொள்ள முடியாதா?

இதற்கு 'வெளியிட வேண்டும்' அல்லது 'வெளியிட வேண்டாம்' என்ற இரண்டில் ஒன்று தானே பதிலாக இருக்க முடியம்?

நேரடியாகப் பதில் சொல்வதை ஏன் அரசு தவிர்க்கிறது?

இந்தக் கோரிக்கைக்குப் பதில் சொல்லாமல் வாதப் பிரதிவாதம், வியாக்கியானம், தத்துவம் எல்லாம் எதற்கு? என்று பதிவிட்டுள்ளார்.


# மத்திய அரசின் வரவு, செலவு திட்ட முன்னோட்ட கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை, டிச.23

தமிழ்நாடு நிதித்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

மத்திய அரசின் வரவு செலவு திட்டத்திற்கான முன்னோட்டம் குறித்து ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் மத்திய அரசு நடத்திய கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் பங்கேற்றேன்.

சென்னை மெட்ரோ ரெயில் 2ம் கட்ட பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு ரூ.26,490 கோடி ரூபாய் செலவிட்டுள்ள காரணத்தால், மாநிலத்தில் இதர வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டில் ரூ. 10,000 கோடி மற்றும் அடுத்த ஆண்டு ரூ.16,000 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டு



மென மத்திய அரசை வலியுறுத்தினேன்.

ஆசிரியர்களுக்கான ஊதியம் கல்வி உரிமைச் சட்டத்தை நடைமுறைப் படுத்தல் உள்ளிட்ட பள்ளிச் செயல்பாடுகளை முடக்கும் வகையில், ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் ரூ.2,152 கோடி நிதியை விடுவிக்காமல் நிபந்தனைகளை ஏற்க வற்புறுத்தி வரும் மத்திய அரசு, 44 இலட்சம் மாணவர்கள் 2.2 இலட்சம் ஆசிரியர்கள் 21,276 பணியாளர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நிதியை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தினேன்.

மத்திய அரசின் 2025 நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டில் புதிய ரெயில் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை அதிகரிக்க வேண்டும் எனவும் மத்திய அரசை வலியுறுத்தினேன்.

வானிலை நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் அவற்றின் தீவிரத் தன்மை காரணமாக தமிழ்நாடு தொடர் பேரிடர் சவால்களைச் சந்தித்து வரும் நிலையில், மக்களின் உயிர் வாழ்வாதாரம் உட்கட்டமைப்புகளுக்கு பெரும் சேதம் உண்டாகி வருகிறது. நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக மாநில பேரிடர் நிவாரண நிதி போதுமானதாக இல்லை. குறிப்பாக, ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளைக்கருத்தில்கொண்டு, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.6.675 கோடியை விடுவிக்க மத்திய அரசை வலியுறுத்தினேன்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்: மீனவர்கள் 6 பேரை தாக்கி ரூ.4 லட்சம் மதிப்பு மீன்பிடி உபகரணங்கள் பறிப்பு

வேதாரண்யம், டிச.23

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருகே தமிழக எல்லையில் வெவ்வேறு இடங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 6 பேரை இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கி மீன்பிடி உபகரணங்களை பறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அது குறித்த விபரம் வருமாறு:

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அடுத்துள்ள கோடியக்கரையில் இருந்து அக்கரைப்பேட்டையைசேர்ந்தவிஜயகுமார் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் அதே பகுதியை சேர்ந்த ராஜ்குமார், ராஜேந்திரன், நாகலிங்கம் ஆகிய 3 மீனவர்கள் நேற்று மதியம் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

அவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு 2 படகுகளில் வந்த 6 இலங்கை கடற்கொள்ளையர்கள் திடீரென மீனவர்களின் படகை வழிமறித்தனர். பின்னர், மீனவர்களின் படகுக்கு சென்று அவர்களை கத்தி மற்றும் கட்டையால் தாக்கி உள்ளனர்.



அதுமட்டுமின்றி, படகில் இருந்த மீன்கள், மீன்பிடி வலைகள், ஜி.பி.எஸ். கருவி உள்ளிட்ட சுமார் ரூ.3 லட்சம் மதிப்புள்ள மீன்பிடி உபகரணங்களை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

இலங்கை கடற்கொள்ளையர்கள் அரங்கேற்றிய இந்த தாக்குதலில் மீனவர் ராஜேந்திரனுக்கு தலையில் வெட்டுக்காயமும், ராஜ்குமாருக்கு தலையில் வெட்டுக்காயம் மற்றும் கையில் கட்டையால் அடித்ததில் காயமும் ஏற்பட்டது. மற்றொரு மீனவரான நாகலிங்கத்திற்கு உள்காயம் ஏற்பட்டது.

மீன்கள், மீன்பிடி உபகரணங்கள்உள்ளிட்டஅனைத்தையும் பறிகொடுத்து, உடலில் பலத்த காயங்களுடன் இன்று காலை மீனவர்கள் கரைக்கு திரும்பினர். அவர்களை கண்ட சக மீனவர்கள் காயமடைந்த 3 பேரையும் மீட்டு வேதாரண்யம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மீனவர்களின் குடும்பத்தினர் கடும் வேதனை அடைந்தனர்.

இதேபோல், வேதாரண்யம் அடுத்துள்ள பெருமாள் பேட்டை கிராமத்தை சேர்ந்த குமார், லட்சுமணன், ஜெகன் ஆகிய 3 மீனவர்கள் கோடியக்கரையில் இருந்து மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

அப்போது அங்கு வந்து இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 மீனவர்களையும் தாக்கி, அவர்களிடம் இருந்த ரூ.1 லட்சம் மதிப்புள்ள வலை, மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

பொருட்களையும் இழந்து, உடலில் காயங்களுடன் இன்று காலை பெருமாள்பேட்டை மீனவர்கள் 3 பேரும் கரை திரும்பினர். பின்னர் நடந்தது குறித்து சக மீனவர்களிடம் கூறி வேதனை தெரிவித்தனர்.

காற்றழுத்த தாழ்வு பகுதி, கனமழை எச்சரிக்கை காரணமாக கடந்த 7 நாட்களாக கடலுக்கு செல்லாமல் இருந்த நாகை மீனவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் கடலுக்கு சென்றனர். அவ்வாறு சென்ற மீனவர்களை அடுத்தடுத்து இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கி அவர்களிடம் இருந்த பொருட்களையும் பறித்த சம்பவம் கோடியக்கரை மீனவர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் தங்களது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுத்து நிரந்தர தீர்வு காண வேண்டும் எனவும் அப்பகுதி மீனவர்கள் கண்ணீர் மல்க கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

# போலீஸ் நிலையங்களில் கட்ட பஞ்சாயத்துக்கு அனுமதி இல்லை அறிவிப்பு பலகை வைத்த போலீசார்

விழுப்புரம், டிச.23

தமிழக டி.ஜி.பி சங்கர் ஜூவால் பல்வேறு மாவட்டகளுக்கு நேரடியாக சென்று போலீஸ் சூப்பிரண்டு அலுவலகங்களில் சட்டம்ஒழுங்கு குறித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

அதன்படி விழுப்புரம் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட 3 மாவட்ட போலீஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் விழுப்புரம் மாவட்ட போலீஸ் நிலையங்கள் முன்பு அறிவிப்பு பலகை என்ற புதிய போர்டு வைக்கப்பட்டுள்ளது.

அதில் போலீஸ் நிலையங்களில் கட்டபஞ்சாயத்துகளுக்கு அனுமதி இல்லை. இப்படிக்கு போலீஸ் நிலையம் என்று




எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து போலீஸ் வட்டாரத்தில் விசாரித்த போது கூறியதாவது:

போலீஸ்நிலையத்திற்கு புகார் கொடுக்க வருபவர்களிடம் கட்டபஞ்சாயத்து செய்வதாக புகார்கள் வந்தது. குறிப்பாக சிவில் வழக்கு, மகளிர் போலீஸ் நிலையங்களில் குடும்ப நல வழக்குகள், அடிதடி வழக்குகளில் வழக்கு பதிவு செய்வதில் புகார்தாரர்கள், எதிர் தரப்பினர்களை வைத்து கட்டப் பஞ்சாயத்து நடப்பதாக புகார் கூறப்பட்டது.

மேலும் இடைத்தரகர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்து வந்து போலீஸ் நிலையங்கள் கட்டப் பஞ்சாயத்து செய்யும் இடங்களாக மாறி வருவதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பான புகார்கள் போலீஸ் சூப்பிரண்டுக்கு சென்ற நிலையில் ஒவ்வொரு போலீஸ் நிலையங்கள் முன்பும் கட்டபஞ்சாயத்து தொடர்பாக அறிவிப்பு பலகை எழுதி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்டத்தில உள்ள போலீஸ் நிலையங்கள் முன்பு கட்டப் பஞ்சாயத்துக்கு இடமில்லை என்று பெரிய எழுத்தில் எழுதி அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புகார் கொடுப்பவர்களிடம் மனுக்கள் பெறப்பட்டு விசாரணை மட்டுமே நடைபெறும். மற்றபடி பேச்சு வார்த்தை போன்ற பஞ்சாயத்துக்கள் நடைபெறாது. இதனை வெளிப்படையாக தெரிவிக்கவே இந்த போர்டுகளை போலீஸ் நிலையம் முன் வைத்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# அமைச்சர் பதவிக்கான தகுதியற்றவர் ரகுபதி: ஜெயக்குமார் தாக்கு



சென்னை , டிச.23

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் வெளியிட்டுள்ள எக்ஸ்தளபதிவில்,

விடியா திமுக ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பதை கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடியார் வெட்டவெளிச்சமாக்கிவிட்ட விரக்தியில், ரகுபதி எனும் உதிர்ந்த ரோமம் பதில் என்ற பெயரில் வாந்தியைக்கக்கியிருக்கிறது. அமைச்சர் என்ற பதவிக்கான எந்தவித தகுதியுமே இல்லாமல் உள்ளவர் தான் ரகுபதி.

அண்ணா தி.மு.க. வேட்டியைக் கட்டி அரசியல்வாழ்வு பெற்று, இந்த இயக்கத் தொண்டர்கள் சிந்திய வியர்வையிலும் ரத்தத்திலும் சட்டமன்ற உறுப்பினராகி, புரட்சித்தலைவி அம்மாவின் பெரும் உழைப்பால் அமைச்சர் பதவியைப் பெற்ற இந்த ரகுபதிக்கு, வாழ்வளித்த இயக்கத்தின் மீதே இழிச்சொல் உரைக்க நா கூசவில்லையா?

அஇஅதிமுக கொடுத்த முகவரியால் இன்று வரை அரசியல் பிழைப்பு நடத்தும் ரகுபதி, அதிமுகவை சீண்டினால் அதற்கான பதிலடி, இருமடங்காக அவரையே வந்து சேரும்.

கருணாநிதி ஆட்சியில் விவசாய பம்பு செட்களுக்கான மின் கட்டணம் குறித்து கேட்ட விவசாயிகளை ஈவு இரக்கமின்றி துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற வரலாற்றை ரகுபதி திமுகவில் இணைந்த பின் வசதியாக மறந்து விட்டாரா?. என தெரிவித்துள்ளார் .

# நெல்லை: கழிவுநீர் தொட்டியில் தவறி விழுந்து தி.மு.க. பிரமுகர் உயிரிழப்பு



நெல்லை, டிச.23

நெல்லை மாவட்டம் வள்ளியூர் சொக்கநாதர் கோவில் தெருவை சேர்ந்தவர் முருகன் (வயது 65). இவர் அங்குள்ள பாத்திர கடையில் வேலை பார்த்து வந்தார். நேற்று முன்தினம் இரவு கடையில் இவர் வழக்கம் போல் பணிகளை முடித்துவிட்டு வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார்.

பஸ் நிலையம் அருகே வந்தபோது, புதிதாக கட்டிடப் பணிகள் நடந்து வரும் பஸ் நிலைய கழிவுநீர் தொட்டியில் எதிர்பாராதவிதமாக தவறி விழுந்தார்.

இரவு நேரம் என்பதாலும், ஆட்கள் நடமாட்டம் இன்றி காணப்பட்டதாலும் யாரும் கவனிக்காமல் இருந்ததாக கூறப்படுகிறது. நேற்று காலை அந்த வழியாக சென்றவர்கள் முருகன், கழிவுநீர் தொட்டியில் கிடப்பதை கண்டு போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

உடனே போலீசார் விரைந்து வந்து பார்த்தனர். அப்போது அங்கு முருகன் பரிதாபமாக இறந்து கிடப்பது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்துபோன முருகன், தி.மு.க.வில் வள்ளியூர் நகர பொருளாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண் வக்கீல் பற்றி அவதூறு: ஸ்ரீரங்கம் ரங்கராஜன் மீது மேலும் ஒரு வழக்கு



சென்னை, டிச.23

திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்த ஆன்மிக பேச்சாளர் ரங்கராஜன் நரசிம்மன் 'யூடியூப்' சேனலில் வெளியிட்ட வீடியோ பதிவில், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள் குறித்து விமர்சித்ததாக கூறப்படுகிறது.

இது குறித்த புகாரின்பேரில்சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள 'சைபர் கிரைம்' போலீசார் வழக்குப்பதிவு செய்து ரங்கராஜனை கடந்த 15ந் தேதி கைது செய்தனர்.

இந்த நிலையில் ஸ்ரீரங்கம் ரங்கராஜன் தன்னை பற்றி சமூக வலைத்தளத்தில் அவதூறு கருத்துகளை தெரிவித்துள்ளதாக சென்னை ஐகோர்ட்டு பெண் வக்கீல் ஒருவர் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் ரங்கராஜன் மீது திருவல்லிக்கேணி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# சிறுத்தை நடமாட்டம்: பொதுமக்களுக்கு வேலூர் மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தல்

குடியாத்தம், டிச.23

குடியாத்தம் அடுத்த பூங்குளம் மலைப்பகுதியில் சிறுத்தை தனது குட்டிகளுடன் சுற்றித்திரிவதால் கிராம மக்கள் பீதி அடைந்துள்ளனர். எனவே, வனத்துறையினர் டிராப் கேமரா அமைத்து தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்தசூழலில், நேற்று பூங்குளம் மலைப்பகுதியில் பாறை மீது ஓய்வெடுத்து கொண்டிருந்ததாக கூறப்படும் அந்த சிறுத்தை திடீரென கிராமத்தில் நுழைந்து அங்கிருந்த சேவல் மற்றும் கோழிக்குஞ்சுகளை விரட்டிவிரட்டி கடித்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குடியாத்தம் வனச்சரகத்திற்கு உட்பட்ட துருவம் கிராமத்தில் சில நாட்களுக்கு முன்பு சிறுத்தை தாக்கியதில் இளம்பெண் பரிதாபமாக இறந்தார். இதனால் பீதியடைந்த கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் தங்களது ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு மலைப்பகுதிக்கு கொண்டு செல்வதில்லை. எனவே, கிராம மக்களை அச்சுறுத்தி வரும் சிறுத்தையை பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது.

இதற்கிடையில் தகவலறிந்த குடியாத்தம் வனத்துறையினர் வீரிசெட்டிப்பள்ளி பீட் மற்றும் காப்புக்காடு பகுதியில் ரோந்து சென்றனர். மேலும், அங்குள்ள மரங்க



ளில் டிராப் கேமரா பொருத்தி சிறுத்தை நடமாட்டம் குறித்து தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் குடியாத்தத்தில் சிறுத்தை நடமாட்டமுள்ளதால் இரவு நேரத்தில் தனியாக செல்வதைதவிர்க்கவேண்டும் என்று வேலூர் மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தி உள்ளார். மேலும் இரவு நேரங்களில் வீட்டின் வெளிப்புறங்களில் விளக்குகளை எரியவிட வேண்டும் என்றும், சிறுத்தை நடமாட்டத்தை அறிந்தால் 97155 16707 என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம் என்றும், சிறுத்தை நடமாட்டம் குறித்து டிரோன் கேமராக்கள் மூலம் தீவிரமாக கண்காணித்து வருவதால் பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விஜயகாந்த் நடித்த படங்களில் இருந்து 150 பாடல்களை பாடும் நிகழ்ச்சி: பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்பு



சென்னை, டிச.23

மறைந்த நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் நடித்த படங்களில் இருந்து 150 பாடல்களை 13 மணி நேரத்தில் பாடும் சாதனை நிகழ்ச்சி சென்னை தியாகராய நகரில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்றார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக நடிகை நளினி, நடிகை வடிவுக்கரசி, நடிகர் கிங்காங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பிரேமலதா விஜயகாந்த், "மறைந்த கேப்டன் விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நினைவு தினத்திற்கு வர வேண்டும் என தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ், பா.ம.க., வி.சி.க., ம.தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்பட தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சியினரையும் நேரில் சென்ற அழைக்க இருக்கிறோம். இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்" என்று தெரிவித்தார்.

# மகளுக்கு காதல் திருமணம் நடத்தி வைத்த நபரை கொன்ற தந்தைக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை



தாராபுரம், டிச.23

தனது மகளுக்கு காதல் திருமணம் செய்து வைத்த நபரைக் கொலை செய்த பெண்ணின்தந்தைக்கு, 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தாராபுரம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கி உள்ளது.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் தாலுகா தம்மரெட்டிபாளையத்தை சேர்ந்தவர் குமாரசாமி (வயது 55). நூறுநாள் வேலை திட்ட தொழிலாளி. அதே ஊரை சேர்ந்த விவசாயி நடராஜ் (55) என்பவர் மகளை, தங்கராஜ் என்பவருக்கு காதல் திருமணம் செய்து வைத்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரம் அடைந்த நடராஜ் கடந்த 2014ம் ஆண்டு குமாரசாமியை கடப்பாரையால் தாக்கியதில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக காங்கயம் போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து நடராஜை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்த வழக்கு தாராபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சரவணன், நடராஜுக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனையும், வாய் தகராறு செய்ததற்கு ரூ.1,000 அபராதமும், கொலை குற்றத்துக்கு ரூ.5 ஆயிரம் அபராதம் என மொத்தம் ரூ.6 ஆயிரம் அபராதம் விதித்தார். நீதிமன்ற தீர்ப்பையடுத்து நடராஜ் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# உலக சேலைகள் தினத்தில் போத்தீஸ் மற்றும் மின்மினி செயலி இணைந்து நடத்திய வாக்கத்தான் போட்டி




சேலம், டிச.23

உலக சேலைகள் தினத்தில் போத்தீஸ் மற்றும் மின்மினி செயலி இணைந்து, கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட வாக்கத்தான் போட்டியை நடத்தியது.

கலாச்சாரத்திற்கும், நம் மண்ணின் நேர்த்தியான கலை அடையாளத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் சேலையை கௌரவிக்கும் விதமாக ஜவுளிகளின் ஆலயமான போத்தீஸ் மற்றும் மின்மினி செயலி ஆகியோர் இணைந்து #PothysSareeDay என்கிற ஹேஷ்டேக் போட்டியை அறிவித்திருந்தார்கள். இதில் சேலை அணிந்து வித்தியாசமான ரீல்ஸ்கள் மற்றும் போட்டோ எடுத்து ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் சமூக வலைதளபக்கத்தில் பகிர்த்திருந்தார்கள். சேலை அணிந்து சிலம்பம் சுற்றி வீரத்தையும், பெண்மையின் தீரத்தையும் வெளிப்படுத்துவது, சேலை அணிந்து வாகனம் ஓட்டி அசத்துவது, அழகிய புதுமைகளாக வெவ்வேறு கலாச்சார பின்னணி கொண்ட சேலைகள் அணிந்து ஆச்சரியப்பட வைக்கும் ஆயிரக்கணக்கான ரீல்ஸ்களை ஏராளமான பெண்கள், கல்லூரி மாணவிகள் பதிவிட்டனர். இதிலிருந்து மூன்று வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி முதல் பரிசை அக்ஷயாவும், இரண்டாம் பரிசை அதிதி ஜெயினும், மூன்றாம் பரிசை தாரிணி பவித்ராவும் வென்றனர். இவர்களுக்கு போத்தீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு.ரமேஷ் அவர்கள் முதல் பரிசாக போத்தீஸ் வழங்கும் ரூபாய் 15000 மதிப்புள்ள கிப்ட் வவுச்சர், இரண்டாம் பரிசாக ரூபாய் 10000 மதிப்புள்ள கிப்ட் வவுச்சர் மற்றும் மூன்றாம் பரிசாக ரூபாய் 5000 மதிப்புள்ள கிப்ட் வவுச்சர்களை பரிசுகளாக வழங்கினார்.

மேலும் சேலையை கௌரவிக்கும் விதமாக போத்தீஸ் சேலை தின இன்டெர் காலேஜ் ஃபெஸ்ட் நேற்று (டிசம்பர் 20) மீனம்பாக்கம் ஏ.எம் ஜெயின் கல்லூரியில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக கல்லூரி மாணவிகள் கலந்துகொண்ட வாக்கத்தான் போட்டி நடைபெற்றது. இதில் 800க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் சேலை அணிந்து கொண்டு வண்ண தேவதைகளாக கலந்துகொண்டனர். இந்த வாக்கத்தான் போட்டியை ஏ.எம் ஜெயின் கல்லூரியின் டீன் முனைவர் ரம்யா அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார் மேலும் சிறப்பு விருந்தினராக திரை பிரபலமான நடிகை சனம் ஷெட்டி கலந்து கொண்டு கல்லூரி மாணவிகளை உற்சாகப்படுத்தும்விதத்தில் வாக்கத்தான் போட்டியில் மாணவிகளுடன் இணைந்து நடந்தார். போட்டியின் முடிவில் இதில் பங்கேற்ற அத்தனை கல்லூரி மாணவிகளையும் பாராட்டும் விதமாக அவர்களுக்கு மெடல்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

# மின்கம்பியில் உரசிய பஸ்.... மின்சாரம் தாக்கி இளம்பெண் உயிரிழந்த சோகம்



ஆற்காடு, டிச.23

ராணிப்பேட்டை மாவட்டம் வாணியம்பாடி வெங்கடாபுரம் பகுதியை சேர்ந்த 40க்கும் மேற்பட்டோர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலுக்கு பஸ்சில் சென்றுள்ளனர். அப்போது பஸ் ஆற்காடு அருகே சென்று கொண்டிருந்த போது வழியில் இருந்த ட கடையில் நிறுத்தி உள்ளனர். அப்போது சாலையோரம் சென்ற உயரழுத்த மின்சாரக்கம்பி பஸ்சின் மேல் தலத்தில் உரசியதாக தெரிகிறது.

இதன் காரணமாக பஸ் முழுவதும் மின்சாரம் பாய்ந்துள்ளது. இதை அறியாமல் ட அருந்துவதற்காக பஸ்சில் இருந்து கீழே இறங்கிய அகல்யா (20) என்ற பெண் பஸ் கம்பியை பிடித்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்தி ே ல ே ய உயிரிழந்துள்ளார். அவரைக் காப்பாற்ற முயன்ற இருவரையும் மின்சாரம் தாக்கியது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அகல்யாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காலணி அணியாமல் பஸ்சின் இரும்பு கைப்பிடியைப் பிடித்து இறங்க முயன்ற போது மின்சாரம் தாக்கியதாக உயிரிழந்த பெண்ணுடன் உடனிருந்த பெண் தெரிவித்தார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கார் ஓட்டும் பயிற்சியின்போது கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை

சென்னை, டிச்.23

சென்னை அண்ணா நகர் பகுதியை சேர்ந்த 19 வயதான கல்லூரி மாணவி ஒருவர், அதே பகுதியில் உள்ள கார் ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் கார் ஓட்டும் பயிற்சிக்கு சென்று வந்தார்.

அவருக்கு திருவேற்காட்டை சேர்ந்த செல்வம் என்ற சித்திரைசெல்வம் (வயது 37) என்பவர் கார் ஓட்டுவதற்கு பயிற்சி கொடுத்து வந்தார்.

கார் ஓட்ட பயிற்சி அளிக்கும்போது செல்வம், கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்த புகாரின்பேரில் அண்ணாநகர் மகளிர் போலீசார் செல்வத்தை கைது செய்தனர்.

## கதாநாயகனாக அறிமுகமாகும் பாலிவுட் நடிகர் கோவிந்தாவின் மகன்



பாலிவுட்டில் 90 காலகட்டத்தில் பிரபல நடிகராக வலம் வந்தவர் நடிகர் கோவிந்தா. இவரது வளைந்து ஆடும், நடன அசைவுகளுக்காகவே ரசிகர்கள் பட்டாளம் அதிகம். பல ஹிட் படங்களை கொடுத்து தன்னை முன்னிறுத்தி கொண்டார். ஜோதிகா, ரம்பா, லைலா நடிப்பில் 2003ம் ஆண்டு வெளியான '3 ரோசஸ்' படத்தில் ஒரு பாடலுக்கு கேமியோ என்ட்ரி கொடுத்து ஆடியிருப்பார்.

பாலிவுட்டின் பிரபல நடிகரான கோவிந்தாவின் மகன் யஷ்வர்தன் அகுஜா நாயகனாக அறிமுகமாக இருக்கிறார். இந்தி திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவர் கோவிந்தா. இவருடைய நடிப்பில் வெளியான காமெடி படங்கள் அனைத்துமே மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றவை. 2019ம் ஆண்டுக்குப் பிறகு நடிப்பதை நிறுத்திவிட்டு, தொலைக்காட்சியில் நடுவராக பணிபுரிந்து வருகிறார்.

தற்போது அவருடைய மகன் யஷ்வர்தா அகுஜா நாயகனாக அறிமுகமாக இருக்கிறார். அப்படத்தினை தெலுங்கில் 'பேபி' படத்தின் மூலம் பிரபலமான சாய் ராஜேஷ் இயக்கவுள்ளார். இதனை மது மண்டேனா, அல்லு அரவிந்த் மற்றும் எஸ்கேஎன் பிலிம்ஸ் ஆகியோர் இணைந்து தயாரிக்கவுள்ளனர்.

இதன் ஆரம்பக்கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு கோடையில் படப்பிடிப்புக்கு செல்ல படக்குழு ஆயத்தமாகி வருகிறது. தற்போது யஷ்வர்தன் அகுஜாவுக்கு நாயகியாக நடிக்க முன்னணி நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றன.

60 வயதாகும் கோவிந்தா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து எம்.பி.யானார். பின்னர் கடந்த மக்களவை தேர்தலுக்கு முன்பு மகாராஷ்டிராவில் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனாவில் தன்னை இணைத்துக்கொண்டார். அதோடு மக்களவை தேர்தலில் பிரசாரமும் செய்தார்.

## 'விடாமுயற்சி' படப்பிடிப்பு நிறைவு: நடிகர் அஜித் குமாருக்கு நன்றி தெரிவித்த இயக்குநர் மகிழ் திருமேனி!




தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்துள்ளார். மகிழ்த்திருமேனி இயக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அர்ஜூன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வரும் பொங்கல் பண்டிகை அன்று இப்படம் வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியானது. அதில், எல்லோரும் எல்லாமும் கைவிடும்போது உன்னை நம்பு.... என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் படத்தின் இயக்குனரான மகிழ் திருமேனி படப்பிடிப்பின் இறுதி நாளான இன்று அவரது நன்றியை வெளிப்படுத்தி பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். இப்பதிவை லைகா படக்குழு தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

அந்தபதிவில் 'உங்களுக்குஎன்னுடையஅன்பும்நன்றியும். நீங்கள்எங்களின்வழிகாட்டியாகஇருந்துள்ளீர்கள். ஒட்டுமொத்த விடாமுயற்சி படக்குழுவுக்கும் ஊக்கத்தை அளித்துள்ளீர்கள். முதல் நாள் முதல் இன்று வரை நீங்கள் எனக்கு அளித்த அன்பு, அக்கறை மற்றும் ஆதரவுக்கு நன்றி' என மகிழ் திருமேனி கூறியுள்ளார்.

## நடிகர் அல்லு அர்ஜூன் வீட்டின் முன் கல்வீச்சு, வன்முறையால் பரபரப்பு

நடிகர் அல்லு அர்ஜுன் நடித்திருந்த புஷ்பா 2 படத்தின் சிறப்பு காட்சி ஐதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் 4ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு திரையிடப்பட்டது. அப்போது, நடிகர் அல்லு அர்ஜுன் மற்றும் நடிகை ராஷ்மிகா மந்தனா ரசிகர்களுடன் படம் பார்க்க சந்தியா தியேட்டருக்கு வந்திருந்தனர். இருவரையும் காண தியேட்டரில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. கட்டுப்படுத்த முடியாத கூட்டம் முண்டியடித்த போது ஏற்பட்ட நெரிசலில், குடும்பத்துடன் படம் பார்க்க வந்த 35 வயதான ரேவதி மற்றும் 9 வயதான அவரது மகன் ஸ்ரீதேஜா இருவரும் சிக்கி நிலைதடுமாறி கீழே விழுந்தனர். அப்போது ரசிகர்கள், இருவர் மீதும் ஏறி மிதித்ததில் படுகாயமடைந்தவர்கள், மூச்சு பேச்சின்றி சுயநினைவை இழந்தனர். அவர்களை மீட்டு முதலுதவி அளித்த போலீசார், ஆர்டிசி கிராஸ்ரோட்டில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகஅழைத்துசென்றனர். ஆனால், ரேவதிஏற்கனவேஉயிரிழந்துவிட்டார். உயிரிழந்தபெண்ணின்குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் இழப்பீட்டு தொகையை அல்லு அர்ஜுன் வழங்கினார்.

இந்த வழக்கில் அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்ட நிலையில், பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில், நடிகர் அல்லு அர்ஜுன் வீட்டின் முன் ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்பினர் இன்று வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் கும்பலாக திரண்டு வந்து, பூந்தொட்டிகளை தூக்கி போட்டு உடைத்தும், கற்களை வீசியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, தகவல் அறிந்து வந்த தெலுங்கானா போலீசார், அல்லு அர்ஜுன் வீட்டின் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர். கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினரிடம் அல்லு அர்ஜுன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர்கள் கோஷம் எழுப்பினர்.

## ரோகித், கே.எல். ராகுலை தொடர்ந்து 3வது இந்திய வீரருக்கு காயம்.. வெளியான தகவல்

இந்திய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பாரடர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 4வது போட்டி வரும் 26ம் தேதி மெல்போர்ன் நகரில் நடைபெற உள்ளது. இதனையொட்டி இந்திய அணியினர் அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பயிற்சியின்போது இந்திய வீரர்களான கே.எல். ராகுலுக்கு கையிலும், கேப்டன் ரோகித் சர்மாவுக்கு காலிலும் காயம் ஏற்பட்டதாக தெரிய வந்தது.

அந்த வரிசையில் தற்போது வேகப்பந்து வீச்சாளரான ஆகாஷ் தீப்பிற்கும் காயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பேட்டிங் பயிற்சியின்போது அவருக்கு காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் அவர் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு மீண்டும் பயிற்சி தொடங்கியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. காயத்தன்மை குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ஆகாஷ் தீப் கடந்த போட்டியில் இறுதி கட்டத்தில் பும்ராவுடன் இணைந்து பேட்டிங்கில் 31 ரன்கள் அடித்து இந்திய அணி பாலோ ஆனை தவிர்க்க முக்கிய பங்கு வகித்தார்.

## பாக்சிங் டே டெஸ்ட்: பும்ரா படைக்க வாய்ப்புள்ள 2 மாபெரும் சாதனைகள்



இந்திய கிரிக்கெட் அணி தற்போது ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் தற்போது வரை 3 ஆட்டங்கள் முடிந்துள்ளன. இதில் முதல் ஆட்டத்தில் இந்தியாவும், 2வது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றுள்ளன. 3வது ஆட்டம் டிராவில் முடிந்தது. இதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது.


இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 4வது போட்டி வரும் 26ம் தேதி 'பாக்சிங் டே டெஸ்ட்' போட்டியாக மெல்போர்னில் நடைபெற உள்ளது.

இந்த போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பும்ரா 2 மாபெரும் சாதனைகள் படைக்க வாய்ப்புள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு: 1. இந்த தொடரில் இதுவரை பும்ரா 21 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மேலும் எஞ்சியுள்ள 2 போட்டிகளில் அவர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தும் பட்சத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஒரு டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை படைப்பார். இதற்கு முன்னர் கபில் தேவ் ஆஸ்திரேலிய ஒரு தொடரில் 25 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். அந்த சாதனையை தற்போது பும்ரா முறியடிக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

2. மேலும் இந்திய அணிக்காக இதுவரை 43 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 194 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள வேளையில் மேலும் அவர் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினால் 200 விக்கெட்டுகளை விரைவாக வீழ்த்திய 2வது வீரர் என்ற சாதனையை படைப்பார். இந்த பட்டியலில் அஸ்வின் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புரோ கபடி லீக்: யு மும்பா அணியை வீழ்த்தி அரியானா ஸ்டீலர்ஸ் வெற்றி




12 அணிகள் இடையிலான 11வது புரோ கபடி லீக் போட்டி கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்திலும், 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவிலும் நடைபெற்று முடிந்தன. இந்த தொடரின் 3வது கட்ட லீக் ஆட்டங்கள் தற்போது புனேவில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் இன்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் பெங்களூரு புல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் அணி 4232 என்ற புள்ளி கணக்கில் பெங்களூரு புல்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் யு மும்பா அரியானா ஸ்டீலர்ஸ் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரியானா ஸ்டீலர்ஸ் அணி 4730 என்ற புள்ளி கணக்கில் யு மும்பா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.